பத்திரிக்கைச் செய்தி

நிலவரி சான்றிதழ் வழங்க ரூ.1,000/- லஞ்சம் கேட்டு பெற்ற வழக்கில் கிராம நிர்வாக அதிகாரிக்கு 3 ஆண்டுகள் சிறை மற்றும் ரூ.10,000/- அபராதம் விதித்து தீர்ப்பு

புகார்தாரர் திரு.அழகு, சிவகங்கை மாவட்டத்தை சேர்ந்தவர். புகார்தாரர் தன்னுடைய நிலத்திற்கு வரி நிர்ணயம் செய்து தர கிராம நிர்வாக அலுவலகம், சிவகங்கை மாவட்டத்தில் விண்ணப்பித்திருந்தார். விண்ணப்பத்தினை பரிசீலனை செய்து நிலுவை நிலவரி மற்றும் புதிய நிலவரி நிர்ணயம் செய்து நிலவரி சான்றிதழ் வழங்க திரு.நாகராஜன், கிராம நிர்வாக அதிகாரி தனக்கு ரூ.1,000/- லஞ்சமாக கொடுக்க வேண்டும் என கேட்டுள்ளனர். லஞ்சம் கொடுக்க விரும்பாத புகார்தாரர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, சிவகங்கை பிரிவில் அளித்த புகாரின்பேரில் வழக்கு பதிவு செய்யப்பட்டு பொறிவைப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. மேற்படி பொறிவைப்பு நடவடிக்கை கடந்த 15.08.2006 அன்று மேற்கொள்ளப்பட்டது. பொறிவைப்பு நடவடிக்கையின்போது புகார்தாரரிடமிருந்து திரு.நாகராஜன், கிராம நிர்வாக அதிகாரி லஞ்சபணம் ரூ.1,000/- பெற்றபோது கைது செய்யப்பட்டார். இவ்வழக்கானது சிறப்பு நீதிமன்றம், சிவகங்கை மாவட்டத்தில் நடைபெற்று வந்தது. இவ்வழக்கில் இன்று 27.02.2026ந் தேதி திரு.நாகராஜன், கிராம நிர்வாக அதிகாரிக்கு 3 ஆண்டுகள் கடுங்காவல் சிறை தண்டணையும் மற்றும் ரூ.10,000/- அபராதம் விதித்து தீர்ப்பளிக்கப்பட்டது.